# பெரியாழ்வார் திருமொழி 4-7
## தங்கையை மூக்கும்
(தேவப்ரயாகை என்று வழங்கும் கண்டமென்னும் திருப்பதியின் பெருமை)

391 * தங்கையை மூக்கும் தமையனைத் தலையும் தடிந்த *
எம் தாசரதி போய் *
எங்கும் தன் புகழாவிருந்து அரசாண்ட * எம் புருடோத்தமன்
இருக்கை **
கங்கை கங்கையென்ற வாசகத்தாலே * கடுவினை
களைந்திடுகிற்கும் *
கங்கையின் கரை மேல் கைதொழ நின்ற * கண்டமென்னும்
கடிநகரே (1)

392 சலம்பொதியுடம்பின் தழலுமிழ் பேழ்வாய்ச் * சந்திரன்
வெங்கதிர் அஞ்ச *
மலர்ந்தெழுந்தணவு மணிவண்ண உருவின் * மால்புருடோத்தமன்
வாழ்வு **
நலம் திகழ் சடையான் முடிக் கொன்றை மலரும் * நாரணன்
பாதத் துழாயும் *
கலந்திழி புனலால் புகர் படு கங்கைக் * கண்டமென்னும்
கடிநகரே (2)

393 அதிர்முகமுடைய வலம்புரி குமிழ்த்தி * அழலுமிழ் ஆழி
கொண்டெறிந்து * அங்கு
எதிர்முகவசுரர் தலைகளை இடறும் * எம் புருடோத்தமன்
இருக்கை **
சதுமுகன் கையில் சதுப்புயன் தாளில் * சங்கரன்
சடையினில் தங்கி *
கதிர்முகமணி கொண்டிழி புனல் கங்கைக் * கண்டமென்னும்
கடிநகரே (3)

394 இமையவர் இறுமாந்திருந்தரசாள * ஏற்று வந்தெதிர் பொரு
சேனை *
நமபுரம் நணுக நாந்தகம் விசிறும் * நம் புருடோத்தமன்
நகர் தான் **
இமவந்தம் தொடங்கி இருங்கடல் அளவும் * இருகரை
உலகிரைத்தாட *
கமையுடைப் பெருமைக் கங்கையின் கரை மேல் *
கண்டமென்னும் கடிநகரே (4)

395 உழுவதோர் படையும் உலக்கையும் வில்லும் * ஒண்சுடர் ஆழியும்
சங்கும் *
மழுவொடு வாளும் படைக்கலம் உடைய * மால் புருடோத்தமன்
வாழ்வு **
எழுமையும் கூடி ஈண்டிய பாவம் * இறைப்பொழுதளவினில்
எல்லாம் *
கழுவிடும் பெருமைக் கங்கையின் கரை மேல் * கண்டமென்னும்
கடிநகரே (5)

396 தலைப்பெய்து குமுறிச்சலம்பொதி மேகம் * சலசல பொழிந்திடக்
கண்டு *
மலைப்பெரும் குடையால் மறுத்தவன் மதுரை * மால்
புருடோத்தமன் வாழ்வு **
அலைப்புடைத் திரை வாய் அருந்தவ முனிவர் * அவபிரதம்
குடைந்தாட *
கலப்பைகள் கொழிக்கும் கங்கையின் கரை மேல் *
கண்டமென்னும் கடிநகரே (6)

397 விற்பிடித்திறுத்து வேழத்தை முருக்கி * மேலிருந்தவன் தலை
சாடி *
மற்பொருதெழப் பாய்ந்து அரையன உதைத்த * மால்
புருடோத்தமன் வாழ்வு **
அற்புதமுடைய அயிராவத மதமும் * அவரிளம்படியர்
ஒண்சாந்தும் *
கற்பக மலரும் கலந்திழி கங்கைக் * கண்டமென்னும் கடிநகரே (7)

398 திரை பொருகடல் சூழ் திண் மதிள் துவரை வேந்து * தன்
மைத்துனன்மார்க்காய் *
அரசினை அவிய அரசினை அருளும் * அரி புருடோத்தமன்
அமர்வு **
நிரை நிரையாக நெடியனயூபம் * நிரந்தரம் ஒழுக்கு விட்டு *
இரண்டு
கரை புரை வேள்விப் புகை கமழ் கங்கை * கண்டமென்னும்
கடிநகரே (8)

399 * வடதிசை மதுரை சாளக்கிராமம் * வைகுந்தம் துவரை
அயோத்தி *
இடமுடை வதரி இடவகை உடைய * எம் புருடோத்தமன்
இருக்கை **

தடவரை அதிரத் தரணி விண்டிடியத் * தலைப் பற்றிக் கரை
மரம் சாடி *
கடலினைக் கலங்கக் கடுத்திழி கங்கைக் * கண்டமென்னும்
கடிநகரே (9)

400 * மூன்றெழுத்ததனை மூன்றெழுத்ததனால் * மூன்றெழுத்தாக்கி *
மூன்றெழுத்தை
ஏன்று கொண்டிருப்பார்க்கு இரக்கம் நன்குடைய * எம்
புருடோத்தமன் இருக்கை **
மூன்றடி நிமிர்த்து மூன்றினில் தோன்றி * மூன்றினில்
மூன்றுருவானான் *
கான் தடம் பொழில் சூழ் கங்கையின் கரை மேல் *
கண்டமென்னும் கடிநகரே (10)

401 * பொங்கொலி கங்கைக் கரைமலி கண்டத்து * உறை
புருடோத்தமன் அடி மேல் *
வெங்கலி நலியா வில்லிபுத்தூர்க் கோன் * விட்டுசித்தன்
விருப்புற்று **
தங்கிய அன்பால் செய் தமிழ் மாலை * தங்கிய
நாவுடையார்க்கு *
கங்கையில் திருமால் கழலிணைக் கீழே * குளித்திருந்த
கணக்காமே (11)